


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 338 | 4 Pages | 4.7.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 338 | 4 பக்கங்கள் | 4.7.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அருவிளிந் தற்று**

**விளக்கம்:**
**பெரியசெல்வம்வந்துசேர்தல்,கூத்தாடும் இடத்தில்கூட்டம்சேர்வதைப்போன்றது, அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.**

## பிரதமர் மோடிக்கு கானா நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவம்



பிரதமர்மோடி5நாடுகள்பயணமாக டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்றார். முதலில், கானா நாட்டுக்கு சென்றார். பிரேசில் நாட்டில் நடக்கும் 'பிரிக்ஸ்' மாநாட்டில் பங்கேற்கிறார். பிரதமர் மோடி, கானா, டிரினிடாட் அண்ட் டுபாகோ, அர்ஜென்டினா, பிரேசில்,நமீபியாஆகிய5நாடுகளுக்கு ஒரு வார கால பயணமாக செல்ல திட்டமிடப்பட்டு இருந்தது.

அந்த பயணத்தை அவர் நேற்று தொடங்கினார். டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்றார். முதலில், அவர் கானா சென்றடைந்தார்.கானா அதிபர்ஜான்டிரமனி மஹாமாஅழைப்பின்பேரில்அவர்சென்றுள்ளார். கோடகா விமான நிலையத்தில் மோடிக்கு இந்தியர்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலும் பிரதமர் மோடியை அதிபர் ஜான் டிரமனி மஹாமா கைக்குலுக்கி வரவேற்றார். கானாவில் பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருதான 'ஆபிஸ் ஆட் தி ஆர்டர் ஆப் தி ஸ்டார் ஆப் கானா விருது' அளித்து கவுரவிக்கப்பட்டது. கானா அதிபர் ஜான் தர்மனி மஹாவாவிடம் இருந்து இந்த விருதை பிரதமர் மோடி பெற்றுக்கொண்டார்.

## பாலி தீவில் படகு கடலில் மூழ்கி விபத்து: 2 பேர் பலி.. மாயமான 43 பேரின் கதி என்ன..?



ஜகார்த்தா, ஜூலை 4

இந்தோனேசியாவின் பாலி தீவு அருகே 65 பேருடன் சென்ற படகு கடலில் மூழ்கி ஏற்பட்ட விபத்தில் சிக்கி 2 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 43 பேர் மாயமாகி உள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தேசிய தேடல் மற்றும் மீட்பு நிறுவனத்தின் அறிக்கையின்படி, புதன்கிழமை இரவு கிழக்கு ஜாவாவில் உள்ள கெட்டபாங் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு கே.எம்.பி. துனு பிரதாமா ஜெயா என்ற கப்பல் விபத்துக்குள்ளானது. இது பாலியில் உள்ள கிலிமானுக் துறைமுகத்திற்குச் சென்று கொண்டிருந்தது, சுமார் 50 கிலோமீட்டர் தூரம் பயணித்தது.

இந்த படகில் 53 பயணிகள், 12 பணியாளர்கள் மற்றும் 14 லாரிகள் உட்பட 22 வாகனங்கள் இருந்தன. இதுவரை இரண்டு உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 20 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பலர் மணிக்கணக்கில் கொந்தளிப்பான நீரில் மிதந்த பின்னர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் பன்யுவாங்கி காவல்துறைத் தலைவர் ராம சம்தாமா புத்ரா தெரிவித்தார்.

மீட்புப் பணிகளில் இழுவைப் படகுகள் மற்றும் சிறிய அளவிலான கப்பல்கள் உட்பட ஒன்பது படகுகள் ஈடுபட்டுள்ளன, அவை நேற்று இரவு அந்தப் பகுதியில் மாயமான 43 பேரை தேடும் பணியில் ஈடுபட்டன. இந்த குழுக்கள் கடினமான சூழ்நிலைகளில் பணியாற்றி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## அபுதாபி இந்து கோவிலில் ரத யாத்திரை திரளான பக்தர்கள் பங்கேற்பு



அபுதாபி, ஜூலை 4

ஒடிசா மாநிலத்தின் இந்து பண்டிகைகளில் புரி ரத யாத்திரை உலக புகழ் பெற்றது ஆகும். இதனை பிரதிபலிக்கும் வகையில் அபுதாபி இந்து கோவிலில் ரத யாத்திரை மிக கோலாகலமாக நடைபெற்றது.

இந்த யாத்திரையில் 2 வகையான வண்ணங்களில் 6 சக்கரங்கள் கொண்ட மரத்திலான ரதங்கள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் உற்சவ மூர்த்தியான பூரி ஜெகன்நாதர், பாலபத்திரர் மற்றும் சுபத்ரா தேவியின் சிலைகள் வைக்கப்பட்டது. மற்றொரு ரதத்தில் ஸ்ரீ அக்ஷர்புருஷோத்தம் மஹராஜ் சிலைகளும் வைக்கப்பட்டன. ரத யாத்திரைக்கு முன்னதாக அங்குபக்தர்கள்முன்னிலையில்அமரவைக்கப்பட்டசாமிசிலைகளுக்கு தீப ஆராதனை காட்டப்பட்டது. தொடர்ந்து பஜனைகள் இசை நிகழ்ச்சிகளுடன் ஆராதனை செய்யப்பட்டு திரளான பக்தர்கள் ரதத்தை இழுத்து கோவிலை சுற்றி வந்தனர். முன்னதாக ரதம் செல்லும் பாதையை பெண் பக்தர்கள் துடைப்பத்தால் சுத்தம் செய்தபடி சென்றனர். ரதம் செல்லும் ரத்ன வீதியை தங்க துடைப்பத்தால் புரி நகர மன்னர்கஜபதி பெருக்கி சுத்தம் செய்வதாக வரலாறு உள்ளது. கைகளில் கொடிகளும், அலங்கார பதாகைகளையும் ஏந்தி கோவிலை சுற்றி ரத யாத்திரையில் பக்தர்கள் வலம் வந்த காட்சி பார்வையாளர்களை கவர்ந்தது. மேலும் பலர் தாங்கள் இந்தியாவில் இருப்பதை போன்று உணர்ந்ததாக தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டின் ஒற்றுமையே நமது வலிமை: முதல்வர்




சென்னை, ஜூலை 4

சென்னை ஆழ்வார்பேட்டையில் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தை தொடக்கிவைத்து, வீடுவீடாகச் சென்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மக்களைச் சந்தித்தார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்திட "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களைத் தொடர்புகொண்டு பேசினேன்.

அவினாசி ஒன்றியத்தில் மக்களுடன் இருந்த திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தினேஷ் குமார், அங்கிருந்த மக்களிடம் அலைபேசியை வழங்க, "தமிழ்நாடு தொடர்ந்து தலைநிமிர்ந்து நடைபோட, திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட வேண்டும்" என்ற தங்களது விருப்பத்தை உற்சாகத்தோடு என்னிடம் வெளிப்படுத்தினர்!" தமிழ்நாட்டின் ஒற்றுமையை நமது வலிமை.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## கௌரி ஸ்டில்ஸ் நிறுவனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 5 ஊர் பொதுமக்களும் சேர்ந்து காத்திருப்பு போராட்டம்



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்துள்ள இச்சிப்பட்டி கிராமத்தில் அமைய இருந்த தனியார் இரும்புத் தொழிற்சாலை கௌரி ஸ்டில்ஸ் நிறுவனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐந்து ஊர் பொதுமக்களும்சேர்ந்துகாத்திருப்புபோராட்டத்தில் ஈடுபட்டனர் கடும் கண்டனத்தையும் பதிவு செய்தனர் முதல் கட்ட பேச்சு வார்த்தையில் கட்டுமான தொழிலாளர்களையும் இயந்திரங்களையும் திரும்ப பெறுவதாக தனியார் நிறுவனத்தின் தரப்பில் கூறப்பட்டது இதனை தொடர்ந்து போராட்ட குழுவினர் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வந்தனர் மேலும் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாய்வு முடிந்தபின் தனியார் தொழிற்சாலை நிறுவனத்தின் அனுமதியை ரத்து செய்வதாகவும் கூறியதன் பேரில் போராட்டம் தற்காலிகமாகஒத்திவைக்கப்பட்டுள்ளதுபோராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஊர் பொது மக்களுக்கு நன்றி தெரிவித்தனர் மீண்டும் இது போன்ற நிகழ்வுகள் நடந்தால் கடுமையான போராட்டத்தை கையில்எடுக்கவேண்டியிருக்கும்எனதெரிவித்தனர். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பும் வேண்டும் எனவும் தெரிவித்தனர் .

## தாராபுரம் அகஸ்தீஸ்வரர் கோயிலில் 35 இணையருக்கு திருமணம்



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் 35 இணையர்களுக்கு திருமண விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்கயல்விழி செல்வராஜ்கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்கள்.

திருமண நிகழ்ச்சியில் மணமக்கள் தங்களுக்கு தேவையான அனைத்து அம்சங்களும் கொண்ட சீர்வரிசை வழங்கப்பட்டது. இதில் 4 கிராம் தங்கத் திருமாங்கல்யம், மணமாலைகள், மெட்டி, மணமகனுக்கான வேஷ்டி சட்டை, மணமகளுக்கான முகூர்த்தப் புடவை, பீரோ, கட்டில், மெத்தை, பாய், தலையணை, போர்வை, மிக்சி, கிரைண்டர், எவர்சில்வர் பாத்திரங்கள், பித்தளை பூஜை சாமான்கள், ஒரு மாதத்திற்கான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள், சுமங்கலி பொருட்கள் மற்றும் கைக்கடிகாரம் உள்ளிட்டவை தலா ரூ.96,562 மதிப்பில் வழங்கப்பட்டன.

இதன்போது செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சாமிநாதன், தெரிவிக்கையில்:

தமிழக அரசு திருக்கோயில்கள் வழியாக சமூகவழி திருமணங்களை ஊக்குவித்து வருகிறது என்றார். கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 1800 இணையருக்குதிருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், தாராபுரம் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, மாநகராட்சி மண்டல தலைவர் பத்மநாபன், நகர்மன்ற தலைவர் பாப்புக்கண்ணன், அறநிலையத்துறை உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் பங்கேற்றனர்.

## டைட்டன் ஐ+ சென்னை, வேளச்சேரில் உள்ள தனது சில்லறை விற்பனை நிலையத்தை புத்தம் புதியதாக புதுப்பித்திருப்பதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துகிறது




இந்தியாவின் மிகவும் நம்பகமான கண் கண்ணாடிகள் பிராண்டாக முன்னணி வகிக்கும் டைட்டன் ஐ+, சென்னை, வேளச்சேரில் உள்ள தனதுவிற்பனைநிலையத்தைப்புதுப்பித்திருப்பதன் மூலம்.தனதுசில்லறைவிற்பனைசெயல்பாடுகளை மேம்படுத்தி இருக்கிறது. 1,200 சதுர அடி பரப்பளவில் தொடங்கப்பட்டுள்ள இந்த புதிய விற்பனை நிலையம், உயர் தரமான கண்ணாடிகள் மற்றும் மிகச்சிறந்த கண்பராமரிப்புப் பொருட்களை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட ஷாப்பிங் அனுபவங்களைவழங்குவதில் டைட்டன் ஐ+ கொண்டிருக்கும் உறுதிப்பாட்டைக் குறிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. வேளச்சேரில் அமைந்துள்ள இந்த விற்பனை நிலையத்தில், கூச்சி, பர்பெர்ரி, ப்ராடா, டாமி ஹில்ஃபிகர், எம்பொரியோ அர்மானி, டாம் ஃபோர்ட், வோக், மான்ட் ப்ளாங்க், சில்லவேட், டைட்டன், ஃபாஸ்ட்ராக் மற்றும் பிற 20 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற சர்வதேச கண்ணாடி பிராண்டுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்கள் விற்பனைக்குஉள்ளன.இதன்மூலம்இந்தவிற்பனை நிலையம் நவீன ஃபேஷன் அம்சங்களை அதிகம் விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவைகளையும், எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்கிறது. புதிய டைட்டன் ஐ+ விற்பனை நிலையமானது, துல்லியமான மற்றும் நம்பகமான கண் பார்வை பரிசோதனை மதிப்பீடுகளுக்காக, கண் மற்றும் பார்வை குறைப்பாடு பரிசோதனை நிபுணர்களால் இலவச கண் பரிசோதனை, ஆலோசனை மற்றும் மேம்பட்ட கண் பரிசோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி இலவச கண் பரிசோதனைகளையும் மேற்கொள்ள உதவுகிறது.

## கின்னஸ் உலக சாதனையுடன் வரலாறு படைத்த பிறகு, சேவ் எர்த் மிஷன் இந்தியாவின் அகமதாபாத்தில் கிராண்ட் குளோபல் விஷன் வெளியீட்டை அறிவிக்கிறது



ஏக் பெட் மா கே நாம்" என்ற பதாகையின்கீழ் வெறும் 1 மணி நேரத்தில் 500,000 மரங்களை நட்டு வரலாற்றுச் சாதனை படைத்ததைத் தொடர்ந்து, சேவ் எர்த் மிஷன் உலகின் கவனத்தை ஈர்த்து மட்டுமல்லாமல் உலகளாவிய காலநிலை விழிப்புணர்வைத் தூண்டியுள்ளது. இந்தியா முழுவதும் பெரும் பங்கேற்பைக் கண்ட கின்னஸ் உலக சாதனைபிரச்சாரம் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டது மற்றும் ஃபோர்ப்ஸ், ஃபாக்ஸ், பிசினஸ் இன்சைடர் மற்றும் முன்னணி தேசிய மற்றும் சர்வதேச தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் உள்ளிட்ட மதிப்புமிக்க ஊடக தளங்களில் இடம் பெற்றது.

இப்போது, சேவ் எர்த் மிஷன் உலகளாவிய அளவில் முன்னேறி வருகிறது. இந்த அமைப்பு இதுவரை இல்லாத மிகப்பெரிய சர்வதேச நிகழ்வான சேவ் எர்த் மிஷன் குளோபல் விஷன் அன்வெயிலிங் ஐ அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இது 2040 ஆம் ஆண்டுக்குள் 30 பில்லியன் மரங்களை நட்டு, உலகை நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை நோக்கி வழிநடத்தும் சேவ் எர்த் மிஷனின் உலகளாவிய உத்தியின் தொடக்கத்தைக் குறிக்கும் ஒரு வரலாற்றைப் படைக்கவுள்ளது. இந்த நிகழ்வு ஜூலை 3, 2025 அன்று, மாலை 6:00 மணிக்கு, இந்தியாவின் அகமதாபாத்தில் உள்ள புகழ்பெற்ற GIFT சிட்டி கிளப்பில் நடைபெறும்.

இந்த உலகளாவிய அறிவிப்பு, சேவ் எர்த் மிஷனின் பயணத்தில் ஒரு மிகப் பெரிய மைல்கல் ஆகும். இந்த அமைப்பு அதன் விரிவாக்கப்பட்ட சாலை வரைபடத்தை வெளியிடும் மற்றும் ஒருங்கிணைந்த காலநிலை இலக்கை நோக்கி சர்வதேச அத்தியாயங்களை அணிதிரட்டும் ஒரு தளமாகும் இந்த நிகழ்விற்கு சேவ் எர்த் மிஷனின் உலகளாவிய வலையமைப்பிலிருந்து தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இந்த நிகழ்வு நாடு வாரியான தோட்டக்கலை இயக்கங்கள், புதிய உலகளாவிய ஒத்துழைப்புகள் மற்றும் காடுகளை மீண்டும் அமைத்தல் மற்றும் நிலைத்தன்மையை நோக்கி விரைவான உந்துதலுக்கான களத்தை அமைக்கும்.

உலகளாவிய பொது வாக்கெடுப்பு செயல்முறை மூலம் இடம் முடிவு செய்யப்பட்டது. இதில் அபுதாபி, துபாய், கோவா, பாங்காக் மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட பட்டியலிடப்பட்ட நகரங்கள் சேவ் எர்த் மிஷன் உலகளாவிய சமூகத்திற்கு வழங்கப்பட்டன. அதிக எண்ணிக்கையிலான வாக்குகளுடன், அகமதாபாத் ஹோஸ்ட் நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. காலநிலை நடவடிக்கையில் இந்த அடுத்த அத்தியாயத்தின் மையமாக இந்தியாவை நிலைநிறுத்தியுள்ளது.

இது இந்தியாவுக்கு மட்டுமல்ல, முழு உலகிற்கும் பெருமை சேர்க்கும் தருணம். மக்கள் பேசியுள்ளனர், அகமதாபாத் உலகளாவிய காலநிலை ஒற்றுமையின் அடையாளமாக உருவெடுத்துள்ளது," என்று சேவ் எர்த் மிஷனின் இந்திய அத்தியாயத்தின் தலைவர் சந்தீப் சவுத்ரி கூறினார். "குளோபல் விஷன் வெளியீட்டு விழாவில், உலகளாவிய மரத் தோட்டங்கள், எல்லை தாண்டிய ஒத்துழைப்புகள் மற்றும் 2040 ஆம் ஆண்டுக்குள் 30 பில்லியன் மரம் நடும் மைல்கல்லை கூட்டாக அடைய குடிமக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களை எவ்வாறு அணிதிரட்டுவோம் என்பதற்கான சேவ் எர்த் மிஷனின் செயல்திட்டத்தை நான் வழங்குவேன் என்றார்.



# வணிகவரி, பள்ளிக்கல்வி துறைகளில் காலியிடங்களை நிரப்ப தயக்கம் ஏன்? அன்புமணி கேள்வி



சென்னை, ஜூலை 3

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழக அரசின் இரு முக்கியத் துறைகளான பள்ளிக்கல்வித்துறை, வணிகவரித்துறை ஆகியவற்றில் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் பல மாதங்களாக காலியாக இருக்கும் நிலையில், அவற்றை நிரப்பவும், தகுதியான அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கவும் தமிழக அரசு மறுத்து வருவது கண்டிக்கத்தக்கது.

தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முதன்மைத்துறை வணிகவரித் துறை ஆகும். அத்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக வணிகவரி அலுவலர், உதவி ஆணையர் பணியிடங்கள் கடந்த சில ஆண்டுகளாக பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படாததால் 200க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. அப்பணியிடங்களுக்கான பதவி உயர்வுப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள நிலையிலும் கூட, அதை செயல்படுத்த அரசு தயாராக இல்லை. அதனால், அத்துறையில் வரி வசூல் பாதிக்கப்படுவதுடன், பணியில் உள்ள அதிகாரிகளுக்கு தேவையற்ற பணிச்சுமையும் ஏற்படுகிறது.

தேபோல், பள்ளிக்கல்வித்துறையில் ஆசிரியர்களில் தொடங்கி முதன்மைக் கல்வி அலுவலர் வரையிலான ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. 15க்கும் மேற்பட்ட முதன்மை கல்வி அலுவலர்கள், 29 மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பல மாதங்களாக இந்த பணியிடங்கள் நிரப்பப்படாததால் உயர்நிலைப்பள்ளிகளிலும், மாவட்ட அளவிலான கல்வி கட்டமைப்பிலும் நிர்வாகப்பணிகள் முடங்கிக் கிடக்கின்றன.

பள்ளிக்கல்வித்துறை தான் இளைய தலைமுறையினரின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைக்கும் துறையாகும். ஏற்கனவே பள்ளிக்கல்வித்துறையில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இத்தகைய சூழலில் தலைமை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் காலியாக கிடந்தால் பள்ளிகளின் செயல்பாடுகள் முடங்கி விடும்; குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும். அப்படிப்பட்ட நிலை ஏற்படுவதைத் தான் திராவிட மாடல் அரசு விரும்புகிறதா? என்பது தெரியவில்லை.

அரசின் அனைத்துத் துறையின் செயல்பாடுகளும் தெளிந்த நீரோடையைப் போல சீராக ஓடிக்கொண்டிருக்க வேண்டும். அதற்கு அனைத்துத் துறைகளிலும் போதிய பணியாளர்கள் தேவை. இல்லாவிட்டால் அரசு நிரவாகம் தேங்கிய குட்டையைப்போலமுடங்கி விடும். எனவே, பள்ளிக்கல்வித்துறை, வணிகவரித்துறை பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள்அனைத்தையும்உரிய நடைமுறைகளை பின்பற்றி நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்புவனம் இளைஞர் மரண வழக்கு: 2வது நாளாக நீதிபதி விசாரணை



சிவகங்கை, ஜூலை 4

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் காளியம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றியவர் அஜித்குமார் (வயது 28). காரில் இருந்த நகைகள் மாயமான புகார் தொடர்பாக அவரை போலீஸ் விசாரணைக்குஅழைத்து சென்றபோது, தனிப்படை போலீசார் தாக்கியதில் கடந்த 29ந்தேதி உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட 4வது கோர்ட்டு நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டு இருந்தது. அதன்படி, நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் நேற்று இந்த வழக்கு குறித்த விசாரணையை தொடங்கினார்.

முதலில் திருப்புவனம் கூடுதல் சூப்பிரண்டு சுகுமார், போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் ஆகியோரிடம் விசாரணை நடத்தி, நகை தொலைந்து போனது தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட சி.எஸ்.ஆர். மற்றும் எப்.ஐ.ஆர். ஆவணங்கள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, போலீஸ் நிலையம் மற்றும் கோவிலில் உள்ள சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்களின் ஆவணங்களையும் நீதிபதியிடம் ஒப்படைத்ததாக தெரிகிறது. தொடர்ந்து, தனிப்படை போலீசார் தாக்குதல் நடத்தியது தொடர்பாக வீடியோ பதிவு செய்த கோவில் பணியாளரான சக்தீஸ்வரன், மடப்புரம் கோவில் இந்து சமய அறநிலையத் துறை உதவி கமிஷனர் அலுவலக உதவியாளர் பெரியசாமி, கோவில் பணியாளர்கள் பிரவீன்குமார், வினோத்குமார், ஆட்டோ டிரைவர் அருண்குமார், கோவில் பாதுகாப்பு அலுவலரும், சி.சி.டி.வி. கண்காணிப்பாளருமான சீனிவாசன் உள்ளிட்டோரிடம் தனித்தனியாக நீதிபதி விசாரணை நடத்தினார்.

அதன்பின்னர், அஜித்குமார் தரப்பு வக்கீல்களில் ஒருவரான கணேஷ்குமாரிடமும் நீதிபதி விசாரணை நடத்தி, பல்வேறு தகவல்களை கேட்டறிந்தார். இந்த விசாரணையின் போது, அஜித்குமார் தாக்கப்பட்ட சம்பவம், நகை திருட்டு போனதா, அந்த புகாரின் உண்மைத்தன்மை உள்ளிட்டவை குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி, அனைவரையும் தனித்தனியாக வைத்து விசாரணை நடத்தினார். இதற்கிடையே அவர்கள் அளித்த தகவல்களை பதிவு செய்யும் வகையில், கோர்ட்டு பணியாளர்களும் அங்கு வந்தனர். இந்த விசாரணையானது, சுமார் 9 மணிநேரத்திற்கு மேலாக நடந்தது. இரவிலும் நீண்ட நேரம் விசாரணை தொடர்ந்தது.

இந்த நிலையில், இளைஞர் மரண வழக்கு தொடர்பாக இன்று 2வது நாளாக நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ், விசாரணை நடத்தி வருகிறார். அஜித்குமார் தாக்கப்பட்ட இடமான கோவிலின் கோசாலை உள்ளிட்ட இடங்களில் விசாரித்து வருகிறார். மேலும் காவலர்கள், மடப்புரம் கோவில் நிர்வாகிகளிடம் விசாரணை நடத்த இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# அரசு அதிகாரிக்கு கொலை மிரட்டல்: தவெக பெண் நிர்வாகி கைது



திண்டுக்கல், ஜூலை 4

திண்டுக்கல்லை சேர்ந்தவர் முருகானந்தம் (வயது 56). இவர், பழனியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் என்ஜினீயராக பணியாற்றி வருகிறார். திண்டுக்கல் சின்ன அய்யங்குளம் பகுதியை சேர்ந்த வடிவேல் மனைவி ரீத்தா (46). இவர், தமிழக வெற்றிக் கழக நிர்வாகியாக உள்ளார்.

முருகானந்தத்துக்கும், ரீத்தாவுக்கும் இடையே பணம் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக ஏற்கனவே தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் சம்பவத்தன்று ஏற்பட்ட தகராறில் முருகானந்தத்தை ரீத்தா அவதூறாகபேசிகொலை மிரட்டல்விடுத்தார். இது குறித்துஅவர்திண்டுக்கல் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர்பாலமுருகன், தாடிக்கொம்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சூரியகலா மற்றும் போலீசார் வழக்குப்பதிவு செய்து, ரீத்தாவை கைது செய்தனர். ரீத்தா மீது ஏற்கனவே தாடிக்கொம்பு, திண்டுக்கல் மேற்கு போலீஸ் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா கைதான வழக்கு: போதைப்பொருள் சப்ளை செய்த 4 பேருக்கு போலீஸ் காவல்



சென்னை, ஜூலை 4

'கொகைன்' போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில், நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை நுங்கம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில், போதைப்பொருள் சப்ளைசெய்ததாகசேலத்தைச் சேர்ந்த பிரதீப்குமார், பெங்களூருவை சேர்ந்த ஆப்பிரிக்க நாட்டவர் ஜான், அ.தி.மு.க. முன்னாள் பிரமுகர் பிரசாத், நடிகர் கிருஷ்ணாவின் நண்பர் கெவின் ஆகிய 4 பேரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு புழல் சிறையில் இருக்கிறார்கள்.

இந்த 4 பேரையும் சென்னை போதைப் பொருள் சிறப்பு கோர்ட்டு அனுமதியுடன் நுங்கம்பாக்கம் போலீசார் 4 நாட்கள் போலீஸ் காவலில் எடுத்தனர். அவர்கள் 4 பேரிடமும் அதிரடி விசாரணை நடக்கிறது.

# திருப்புவனம் இளைஞர் மரணம்: உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக முக்கிய சாட்சி டிஜிபிக்கு கடி



சிவகங்கை, ஜூலை 4

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் காளியம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றியவர் அஜித்குமார் (வயது 28). காரில் இருந்த நகைகள் மாயமான புகார் தொடர்பாக அவரை போலீஸ் விசாரணைக்கு அழைத்து சென்றபோது, தனிப்படை போலீசார் தாக்கியதில் கடந்த 29ந்தேதி உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, இதில் தொடர்புடையதாக கூறப்படும் தனிப்படை போலீஸ்காரர்களான பிரபு, கண்ணன், சங்கர மணிகண்டன், ராஜா, ஆனந்த் ஆகியோர் மீது கொலை வழக்கு பதிவு செய்து, கைது செய்யப்பட்டுசிறையில்அடைக்கப்பட்டனர். மேலும் இந்த வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இதற்கிடையில், இளைஞர் அஜித்குமாரை போலீசார்தாக்கும்வீடியோவெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. மடப்புரம் கோவிலின் அருகே உள்ள கோ சாலை உள்ள இடத்தில், தனிப்படை போலீசார் அஜித்குமாரை விசாரணைக்காக அழைத்து சென்று அவரை ஒரு கம்பியில் கட்டி வைத்து பிளாஸ்டிக் மற்றும் இரும்பு குழாய்களால் சரமாரியாக தாக்கினர். அஜித்குமாரை தாக்கும்போலீசார்எந்தவித காவல் சீருடையும் அணியாமல் சாதாரண உடையில் அவரை சரமாரியாக தாக்குகின்றனர். அதுமட்டுமின்றி செருப்புடன் அஜித்குமாரை கடுமையாக உதைத்துள்ளனர். இந்த காட்சிகள் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

போலீசாரால் காவலாளி அஜித்குமார் தாக்கப்பட்டதை வீடியோ எடுத்திருந்த சக்தீஸ்வரன் நேற்று முன்தினம் மதுரை ஐகோர்ட்டில் ஆஜராகி வீடியோவை ஆதாரமாக பதிவு செய்தார். அவரிடம் நீதிபதிகள், வீடியோவை எங்கிருந்து எடுத்தீர்கள்? எவ்வளவு நேரம் எடுத்தீர்கள்? என்ன நடந்தது? யார் அங்கு இருந்தார்கள்? என கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், கோவில் பின்புறம் உள்ள கழிவறையில் இருந்து வீடியோ எடுத்தேன், சிறிது நேரம் தான் எடுத்தேன். என்னை போலீசார்கண்டுபிடித்து விடுவார்களோ? என்ற பயத்துடனேயே வீடியோ எடுத்தேன் என்றார்.

இந்த நிலையில், திருப்புவனம் இளைஞர் மரணம் வழக்கில் முக்கிய சாட்சியாக இருக்கும் சக்தீஸ்வரன் பாதுகாப்பு கோரி தமிழக டிஜிபி சங்கர் ஜிவாலுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், ரவுடிகளுடன் தொடர்பிலுள்ள காவலர்கள், ஏற்கனவே தன்னை மிரட்டினர். வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள காவலர் ராஜா கடந்த 28ம் தேதியே தன்னை மிரட்டினார். தனக்கும், தன்னை சார்ந்தோரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும்என்றுஅதில்கோரிக்கை வைத்துள்ளார்.

# அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளராக சீர்காழி சத்யா நியமனம்: திமுக கூட்டணிக்கு ஆதரவு!



அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சிவகங்கையில் நடைபெற்றது.

கட்சியின் மாநில பொதுச் செயலாளர் திருப்பூர் கர்ணன் அவர்கள் தலைமையிலும் மாநில பொருளாளர் மற்றும் தேசிய செயலாளருமான ஸ்ரீ வை சுரேஷ் தேவர் தலைமையிலும் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்:1)அனைத்து மாவட்டங்களிலும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் வளர்ச்சிக்காக தொடர்ந்து நிர்வாகிகள் தீவிரமாக செயல்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி கட்சிகளின் வெற்றிக்காக அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில நிர்வாகிகள் இன்று முதல் தொடர்ந்து தீவிரமாக தேர்தல் பணி செய்ய அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து கிளை முதல் நகர ஒன்றிய மாவட்ட நிர்வாகிகளைசிறப்பாக செயல்பட ஊக்குவிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4) அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளராக ஆற்றல் மிகு காம்ரேட் சீர்காழி சத்யா அவர்களை நியமிக்கிறோம்

# கபாலீஸ்வரர் கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, ஜூலை 4

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்கு இமெயில் மூலம் மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர்.

இது குறித்து கோவில் ஊழியர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்த போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாயுடன் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

கபாலீஸ்வரர் கோவிலுக்குள் மோப்ப நாயை பயன்படுத்தி கோவில் முழுவதும் தீவிர சோதனை நடத்தினர். கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அறிந்த பக்தர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் சோதனை முடிவில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பதை போலீசார் உறுதி செய்தனர்.

# கள்ளக்காதலியுடன் கணவர் தனிமையில் உல்லாசம்... கண்டித்த மனைவி... அடுத்து நடந்த கொடூரம்





கடலூர், ஜூலை 4

கடலூர் மாவட்டம் நெய்வேலி இந்திராநகர் பி2 மாற்றுக்குடியிருப்பை சேர்ந்தவர் கொளஞ்சியப்பன்(வயது 62). இவரது முதல் மனைவி வீரலட்சுமி, இறந்து விட்டார். எனவே கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு பத்மாவதி(47) என்பவரை கொளஞ்சியப்பன் 2வது திருமணம் செய்து கொண்டார்.

என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தில் ஊழியராக பணிபுரிந்த கொளஞ்சியப்பன், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றார். தற்போது இந்திரா நகரில் உள்ள துணிக்கடையில்காவலாளியாக வேலை பார்த்து வந்தார். 3 ஆண்டுகளுக்கு முன்பு கொளஞ்சியப்பனுக்கு இந்திராநகர் 2வது தெருவை சேர்ந்த ஒரு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்தனர்.

இது பற்றி அறிந்ததும் அதிர்ச்சி அடைந்த பத்மாவதி, கள்ளத்தொடர்பை கைவிடுமாறு கூறினார். கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. சமீபத்தில் மனைவியுடன் தகராறு ஏற்பட்ட போது, வீட்டை கள்ளக்காதலிக்கு எழுதி கொடுத்து விடுவேன் என்று கொளஞ்சியப்பன் மிரட்டினார். இது பத்மாவதிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் சம்பவத்தன்று இரவு வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்த கொளஞ்சியப்பன், சாப்பிட்டுவிட்டு தூங்கினார். அதிகாலை 2.15 மணி அளவில் பத்மாவதி திடீரெனகண்விழித்தார். அங்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கணவரை பார்த்ததும் அவருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. உடனே வீட்டில் இருந்த கடப்பாரையை எடுத்து கொளஞ்சியப்பனின் தலையில் குத்தினார். தலையில் கடப்பாரை துளைத்துச்சென்ற இடத்தில் இருந்து ரத்தம் பீறிட்டு வெளியேறியது. இதில் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அவர் இறந்தார். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பத்மாவதியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதல் திருமணம் செய்த தம்பதி தற்கொலை... குழந்தை இல்லாத ஏக்கத்தில் விபரீத முடிவு?



விழுப்புரம், ஜூலை 4

புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை கண்ணதாசன் தெருவை சேர்ந்தவர் பார்த்திபன்(வயது 31). தனியார் நிதி நிறுவன ஊழியர். இவர் சென்னை தியாகராய நகரை சேர்ந்த மணிகண்டன் மகள் கீர்த்திகா(26) என்பவரை காதலித்து கடந்த 2022ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு குழந்தை இல்லை.

இந்தநிலையில் கீர்த்திகா சம்பவத்தன்று மதியம் 2 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே சிறுவாடி கிராமத்தில் உள்ள தனது தாய்மாமன் சதீஷ் என்பவரை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது நானும், எனது கணவரும் உங்களுடைய வீட்டிற்கு வந்து கொண்டிக்கிறோம் என்று கூறியுள்ளார்.


ஆனால் அவர்கள் சதீஷ் வீட்டிற்கு செல்லாமல் முருக்கேரி ஏரிக்கரைக்கு சென்றனர். பின்னர், இருவரும் தாங்கள் கொண்டு வந்திருந்த விஷத்தை எடுத்து குடித்தனர். சிறிது நேரம் கழித்து சதீசை மீண்டும் செல்போனில் தொடர்பு கொண்ட கீர்த்திகா, நானும், எனது கணவரும் முருக்கேரி ஏரிக்கரைக்கு வந்து விஷம் குடித்துவிட்டதாக தெரிவித்தார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த சதீஷ் ஏரிக்கரைக்கு விரைந்து வந்தார்.

அப்போது மயங்கிய நிலையில் கிடந்த கீர்த்திகா, பார்த்திபன் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக முருக்கேரியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றார். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்தபோது ஏற்கனவே கீர்த்திகா உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். தொடர்ந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த பார்த்திபனை மேல்சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே அவரும் பரிதாபமாக உயிரிழந்தார். இதற்கிடையே தகவல் அறிந்து வந்த பிரம்மதேசம் போலீசார் உயிரிழந்த கணவன்மனைவியின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுகுறித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து திருமணமாகி 3 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத ஏக்கத்தில் தம்பதி தற்கொலை செய்து கொண்டனரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா? என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வைகை அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்



தேனி, ஜூலை 4

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை அமைந்துள்ளது. தென்மேற்கு பருவமழை காரணமாக கடந்த வாரம் அணையின் நீர்மட்டம் 63 அடியை எட்டியது. வைகை அணையில் இருந்து ஏற்கனவே திண்டுக்கல், மதுரை மாவட்ட முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வைகை அணையின் பூர்வீக பாசனப் பகுதியான ராமநாதபுரம் மாவட்டத்துக்கு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக கடந்த வாரம் வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது. கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் சரிவதை தடுக்கும் வகையில் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வைகை அணைக்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த வாரம் வைகை அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக படிப்படியாக குறைக்கப்பட்டு நேற்று காலை 6 மணி அளவில் ராமநாதபுரம் மாவட்டத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டது.

ஆனால் வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கடந்த ஒரு வாரமாக கூடுதலான தண்ணீர் திறக்கப்பட்டதால் வைகை அணையின் நீர்மட்டம் 4 அடி குறைந்து 59 அடியாக சரிந்துள்ளது. அதே நேரத்தில் நீர்வரத்து கூடுதலாக உள்ளதால் வைகை அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

# ரீல்ஸ் மோகம்: தண்டவாளத்தில் பைக் ஓட்டிச்சென்ற வாலிபர் வைரலாகும் வீடியோ



ஊட்டி, ஜூலை 4

நீலகிரி மலைரெயில் பாதையில் ரீல்ஸ் மோகத்தால் வாலிபர் ஒருவர் தண்டவாளத்தில் பைக் ஓட்டிச் சென்றதுடன், புகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார். நாகர்கோவிலில் இருந்து சமீபத்தில் சென்னை சென்ற எக்ஸ்பிரஸ் ரெயிலில் இளம்பெண் ஒருவர் ஆபத்தான முறையில் வீடியோ எடுத்து பதிவிட்டது பெரும் சர்ச்சைக்கு உள்ளானது.

பின்னர் அவர் மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிட்டார். இந்த நிலையில் இன்ஸ்டாகிராம் பிரபலம் ஒருவர் ஊட்டி மலைரெயில் பாதையில் அத்துமீறி தண்டவாள பகுதியில் மோட்டார் சைக்கிளை ஓட்டிசென்றும், தண்டவாளத்தின் குறுக்கே மோட்டார் சைக்கிளை நிறுத்தி புகைப்படம் எடுத்தும் ரீல்ஸ் எடுத்து வெளியிட்டுள்ளார். தற்போது இந்த காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இதற்கு சமூக ஆர்வலர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். மேலும் அத்துமீறலில் ஈடுபட்ட நபர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# பராமரிப்பு பணிகள்: பல்வேறு எக்ஸ்பிரஸ் ரெயில்கள் பகுதி நேர ரத்து



சென்னை, ஜூலை 4

மதுரை கோட்டத்தில் பல்வேறு பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

★ கோவையில் இருந்து காலை 8 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவில் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.16322), இன்று (வியாழக்கிழமை) முதல் வரும் 15ந்தேதி வரையில் திண்டுக்கல் நாகர்கோவில் இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, திண்டுக்கல்லில் நிறுத்தப்படும்.

★ திருச்சியில் இருந்து காலை 7.05 மணிக்கு புறப்பட்டு ராமேசுவரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16849), வரும் 7,8,9,10,11,14,15 ஆகிய தேதிகளில் மானாமதுரை ராமேசுவரம் இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, மானாமதுரையில் நிறுத்தப்படும்.

★ ராமேசுவரத்தில் இருந்து மாலை 3 மணிக்கு புறப்பட்டு திருச்சி செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16850), வரும் 7,8,9,10,11,14,15 ஆகிய தேதிகளில் ராமேசுவரம் மானாமதுரை இடையே பகுதி நேரம் ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயில் ராமேசுவரத்தில் இருந்து புறப்படுவதற்கு மாற்றாக மானாமதுரையில் இருந்து காலை 6.55 மணிக்கு புறப்பட்டு திருச்சி செல்லும்.

மாற்றுப்பாதை

★ மயிலாடுதுறையில் இருந்து வரும் 6,9,13 ஆகிய தேதிகளில் மதியம் 12.10 மணிக்கு புறப்பட்டு செங்கோட்டை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16847), மணப்பாறை, வையம்பட்டி, வடமதுரை, திண்டுக்கல், கொடைக்கானல் சாலை, மதுரை, திருப்பரங்குன்றம், திருமங்கலம், கள்ளிக்குடி ஆகிய பகுதி வழியாக செல்லாது. அதற்கு மாற்றாக திருச்சி, காரைக்குடி, மானாமதுரை, விருதுநகர் ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். கூடுதலாக புதுக்கோட்டை, தேவகோட்டை சாலை, சிவகங்கை, அருப்புக்கோட்டை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது.

★ செங்கோட்டையில் இருந்து வரும் 4,5,7,8,9,11,12,14,15 ஆகிய தேதிகளில் காலை 6.55 மணிக்கு புறப்பட்டு மயிலாடுதுறை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16848), கள்ளிக்குடி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், மதுரை, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல், வடமதுரை, வையம்பட்டி, மணப்பாறை ஆகிய பகுதி வழியாக செல்லாது. அதற்கு மாற்றாக விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப் பாதை வழியாக செல்லும். கூடுதலாக அருப்புக்கோட்டை, சிவகங்கை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது.

★ கன்னியாகுமரியில் இருந்து வரும் 5,12 ஆகிய தேதிகளில் காலை 5.50 மணிக்கு புறப்பட்டு ஹவுரா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (12666), மதுரை, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் ஆகிய பகுதி வழியாக செல்லாது. அதற்கு மாற்றாக, விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப் பாதை வழியாக செல்லும். கூடுதலாக அருப்புக்கோட்டை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது.

★ கன்னியாகுமரியில் இருந்து வரும் 4,11 ஆகிய தேதிகளில் காலை 5.15 மணிக்கு புறப்பட்டு ஐதராபாத் செல்லும் சிறப்பு ரெயில் (07229), மதுரை, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் ஆகிய பகுதி வழியாக செல்லாது. அதற்கு மாற்றாக, விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப் பாதை வழியாக செல்லும். கூடுதலாக அருப்புக்கோட்டை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது.

★ நாகர்கோவிலில் இருந்து வரும் 20ந்தேதி காலை 6.15 மணிக்கு புறப்பட்டு மும்பை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16352), மதுரை, திண்டுக்கல் ஆகிய பகுதி வழியாக செல்லாது. அதற்கு மாற்றாக, விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். கூடுதலாக அருப்புக்கோட்டை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது.

புறப்படும் நேரம் மாற்றம்

★ மதுரையில் இருந்து காலை 10.40 மணிக்கு புற்பபட்டு தெலுங்கானா மாநிலம் காச்சிகுடா செல்லும் சிறப்பு ரெயில் (07192), அதற்கு மாற்றாக வரும் 9ந்தேதி மதுரையில் இருந்து மதியம் 12 மணிக்கு (1 மணி நேரம் 20 நிமிடம் தாமதம்) புறப்பட்டு காச்சிக்குடா செல்லும்.

★ ராமேசுவரத்தில் இருந்து காலை 9.10 மணிக்கு புறப்பட்டு தெலுங்கானா மாநிலம் சார்லபள்ளி செல்லும் சிறப்பு ரெயில் (07696), அதற்கு மாற்றாக வரும் 4,11 ஆகிய தேதிகளில் ராமேசுவரத்தில் இருந்து இரவு 7 மணிக்கு (9 மணி நேரம் 50 நிமிடம் தாமதம்) புறப்பட்டு சார்லபள்ளி செல்லும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# சுற்றுப்பயணத்தில் மாற்றம்: எடப்பாடி பழனிசாமி தினமும் 3 சட்டசபை தொகுதிகளுக்கு செல்கிறார்

சென்னை, ஜூலை 4

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சூறாவளி பிரசாரம் செய்கிறார். அதற்காக அவரது முதல்கட்டமாக சுற்றுப்பயணம் விவரம் அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி அவர் தினமும் 3 சட்டசபை தொகுதிகளுக்கு செல்கிறார். அவர் வருகிற 7ந் தேதி முதல் 23ந் தேதி வரை சட்டமன்ற வாரியாக செல்லும் இடங்கள் குறித்து அ.தி.மு.க. தலைமை கழகம் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது. அதன் விவரம் வருமாறு: 7ந் தேதி மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம். 8ந் தேதி கோவை வடக்கு, கோவை தெற்கு. 10ந் தேதி விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம், 11ந் தேதி வானூர், மயிலம், செஞ்சி, 12ந் தேதி கடலூர், பண்ருட்டி, நெய்வேலி. 14ந் தேதி குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், திட்டக்குடி. 15ந் தேதி குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம். 16ந் தேதி சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோயில். 17ந் தேதி சீர்காழி, பூம்புகார், மயிலாடுதுறை. 18ந் தேதி நன்னிலம், திருவாரூர், கீழ்வேளூர். 19ந் தேதி நாகப்பட்டினம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி. 21ந் தேதி மன்னார்குடி, திருவிடைமருதூர், கும்பகோணம். 22ந் தேதி பாபநாசம், தஞ்சை, திருவையாறு. 23ந் தேதி ஒரத்தநாடு, பேராவூரணி, பட்டுக்கோட்டை. ஆகிய சட்டசபை தொகுதிகளுக்கு செல்கிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாணவிக்கு பாலியல் தொல்லை: தொழிலாளிக்கு 5 ஆண்டுகள் சிறை நெல்லை போக்சோ கோர்ட்டு தீர்ப்பு



திருநெல்வேலி ஜூலை 4

திருநெல்வேலி மாவட்டம் அம்பை சந்தைமடம் தெருவைச் சேர்ந்தவர் ரத்தினம் (45 வயது). டீக்கடை தொழிலாளியான இவர் 2022ம் ஆண்டு பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்து மிரட்டியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து அம்பை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து ரத்தினத்தை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை நெல்லை மாவட்ட போக்சோ சிறப்பு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கை நீதிபதி சுரேஷ் குமார் விசாரித்து, குற்றம் சாட்டப்பட்ட ரத்தினத்திற்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பு கூறினார். இந்த வழக்கில் அரசு வக்கீல் உஷா ஆஜரானார். போலீசாரின் துரித நடவடிக்கையால் இந்த ஆண்டில் இதுவரை 11 போக்சோ வழக்குகளில் 11 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. அதில் சரித்திர பதிவேடு குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. நெல்லை மாவட்ட காவல்துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் தெரிவித்தார்.

# சாலையில் தேங்கிய மழைநீரில் மின்கசிவு: மின்சாரம் தாக்கி 12ம் வகுப்பு மாணவர் பலி



சென்னை ஜூலை 4

சென்னை திருவொற்றியூர் தாங்கல் பீர் பயில்வான்தெருவை சேர்ந்தவர் அல்தாப். அவரது மகன் நவ்பில் (வயது 17). இவர் வீட்டின் அருகே உள்ள தனியார் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். நேற்று இரவு டியூசன் முடித்துவிட்டு நவ்பில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது வீட்டின் வெளியே சாலையில் தேங்கியிருந்த மழைநீரில், சேதமடைந்த மின்ஒயர் பட்டதில் மின்கசிவு ஏற்பட்டுள்ளது. இதை கவனிக்காத நவ்பில் நீரில் கால் வைத்த போது மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டுள்ளார்.

உடனே அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். அதைத்தொடர்ந்து திருவொற்றியூர் போலீசார் மாணவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து மின்வாரியம் அலட்சியமாக செயல்பட்டதால் 12ம் வகுப்பு மாணவர் உயிரிழந்ததாக கூறி அப்பகுதியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் திருவொற்றியூர் நெடுஞ்சாலை சந்திப்பில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

# தாா்ப்பாய் வீடு... யானைகளின் பிளிறல் சத்தம்... பொதிகை மலையில் தனியாக வாழும் 110 வயது மூதாட்டி



நெல்லை, ஜூலை 4

நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலையில் பொதிகை மலையின் உச்சியில் பூங்குளம் பகுதியில் தாமிரபரணி ஆறு உற்பத்தியாகிறது. மலையில் பாய்ந்தோடும் நீரோடைகள் பாபநாசம் காரையாறு அணையை வந்தடைகின்றன. காரையாறு அணை அருகில் அகஸ்தியர் காலனி குடியிருப்பு, சின்ன மைலார், பெரிய மைலார், சேர்வலாறு, இஞ்சிக்குழி உள்ளிட்ட இடங்களில் காணி இன பழங்குடி மக்கள் வசித்து வருகின்றனர்.

காரையார் அணைக்கு மேலே சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் அடர்ந்த காட்டுக்குள் பொதிகை மலை உச்சியின் அடிப்பகுதியில் இஞ்சிக்குழி கிராமம் உள்ளது. முன்பு இங்கு 40 குடும்பத்தினர் வசித்த நிலையில் தற்போது 3 குடும்பத்தினர் மட்டுமே வசிக்கின்றனர். அதில் குட்டியம்மாள் (வயது 110) என்ற மூதாட்டி மட்டும் தார்ப்பாயாலான வீட்டில் தனியாக வசிக்கிறார். மற்ற குடும்பத்தினர் வேலைக்காக காரையாறு அணை அடிவாரத்துக்கு சென்றுவிட்டு, அவ்வப்போது இஞ்சிக்குழி வருகின்றனர்.

அடர்ந்த வனப்பகுதியான இங்கு சுற்றுலாபயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும் சாலை, தொலைத்தொடர்பு உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதிகளும் கிடையாது. இஞ்சிக்குழியில் அடர்ந்த காட்டில் தனியாக வசிக்கும் மூதாட்டி குட்டியம்மாளுக்கு கடந்த 2021ம் ஆண்டு நெல்லை மாவட்ட கலெக்டராக இருந்த விஷ்ணு முதியோர் உதவித்தொகை வழங்க உத்தரவிட்டார். மேலும் அவரது வீட்டுக்கு சோலார் மின்வசதி அமைத்து கொடுத்தார்.

காரையார் தபால் அலுவலகத்தில் இருந்து தபால் அலுவலர் கிறிஸ்துராஜா மாதந்தோறும் இஞ்சிக்குழிக்கு நடந்து சென்று உதவித்தொகை வழங்கி வருகிறார். தற்போது குட்டியம்மாள் வயது முதிர்வு காரணமாக தளர்ந்து காணப்படுகிறார். சரிவர நடக்க முடியாததால் எங்கும் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கினார். மேலும் காரையாறில் உள்ள ரேஷன் கடைக்கும் சென்று உணவுப்பொருட்களை வாங்க முடியாத நிலை உள்ளது.

இதுகுறித்து மூதாட்டி குட்டியம்மாள் கூறுகையில், "இஞ்சிக்குழியில் 40 குடும்பத்தினர் வசித்த நிலையில் தற்போது நான் மட்டுமே வசிக்கின்றேன். இங்கு எந்த வசதியும் இல்லாததால் பலரும் மலையடிவாரத்துக்கு சென்று விட்டனர். 2 குடும்பத்தினர் மட்டும் தங்களது குடியிருப்புகளுக்கு அவ்வப்போது வந்து செல்வார்கள்.

யானைகளின் பிளிறல் சத்தத்தைக் கேட்டுதான் காலையில் கண்விழிப்பேன். சிறுத்தை, கரடி போன்ற வனவிலங்குகள் இயல்பாக சுற்றி திரியும். வயது முதிர்வு காரணமாக காரையாறு ரேஷன் கடைக்கு செல்ல முடியவில்லை. மளிகை பொருட்களையும் வாங்க முடியவில்லை. வனப்பகுதியில் கிடைக்கும் பழங்கள், கிழங்குகளை சாப்பிடுகிறேன். ரேஷன் பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்தால் பயனுள்ளதாக இருக்கும்" என்றார்.

# தமிழகத்தில் 34 பேரூராட்சிகள் தரம் உயர்வு

சென்னை, ஜூலை 4

தமிழ்நாட்டில் 34 பேரூராட்சிகளை தரம் உயர்த்தி தமிழக அரசு அறிவித்துள்ளது. அந்த வகையில் 13 இரண்டாம் நிலை பேரூராட்சிகள் முதல் நிலை பேரூராட்சிகளாகவும், 10 தேர்வு நிலை பேரூராட்சிகள் சிறப்பு நிலை பேரூராட்சிகளாக தரம் உயர்த்தப்படுகிறது.

8 முதல் நிலை பேரூராட்சிகள் தேர்வு நிலை பேரூராட்சிகளாகவும், 3 முதல் நிலை பேரூராட்சிகள் சிறப்பு நிலை பேரூராட்சிகளாக தரம் உயர்த்தப்பட உள்ளது.

# திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கு விழா; சிறப்பு பேருந்துகள் இயக்கம்



தூத்துக்குடி, ஜூலை 4

அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் முருகன் கோவிலில் 14 ஆண்டுகளுக்கு பின் குடமுழுக்கு விழா வருகிற 7ந்தேதி நடைபெறுகிறது. கோவில் குடமுழுக்கையொட்டி தமிழகம் முழுவதிலும் இருந்து 5 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் திருச்செந்தூர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு, நெல்லை திருச்செந்தூர் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. இதேபோன்று, குடமுழுக்கையொட்டி திருச்செந்தூருக்கு 400 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

குடமுழுக்கு விழாவை ஒட்டி வருகிற 4ந்தேதி முதல் சென்னை, திருச்சி, சேலம், தஞ்சை உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகளை இயக்க போக்குவரத்துத்துறை முடிவு செய்துள்ளது.

# த.வெ.க. கொடி விவகாரம்: புதிய மனு தாக்கல் செய்த பகுஜன் சமாஜ் கட்சி

சென்னை, ஜூலை 4

தமிழ் திரையுலகின் உச்ச நட்சத்திரமான நடிகர் விஜய், தமிழக வெற்றிக்கழகம் என்ற பெயரில் கட்சியை தொடங்கியுள்ளார். த.வெ.க. கொடியில் வாகை மலருடன் இரண்டு யானைகள் இடம்பெற்று இருக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்த சூழலில் த.வெ.க. கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச்செயலாளர் பெரியார் அன்பன் சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை யானை சின்னத்தை பயன்படுத்த த.வெ.க. கட்சிக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த இடைக்கால மனு மீது இன்று (வியாழக்கிழமை) தீர்ப்பு கூறப்படும் என கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

இதற்கிடையே, இந்த வழக்கில் தங்கள் தரப்பில் மேற்கொண்டு வாதங்களை முன்வைக்க அனுமதிக்கக் கோரியும், கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதிக்கக்கோரியும் அதே கோர்ட்டில் பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் புதிதாக ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த கோர்ட்டு, பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில் மேற்கொண்டு வாதங்களை முன்வைப்பது தொடர்பாக பதில் அளிக்க த.வெ.க. தரப்புக்கு உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தது.

# அம்பையில் நடந்து சென்றவரை கட்டையால் தாக்கி மிரட்டல்: வாலிபர் கைது




திருநெல்வேலி ஜூலை 4

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், ரயில்வே பீட்டர் ரோடு பகுதியை சேர்ந்த பேச்சிமுத்து (வயது 30) என்பவர் 28.6.2025 அன்று அம்பாசமுத்திரம் ரெயில்வே கேட் அருகே நடந்து வந்து கொண்டிருந்தார். அவ்போது எதிரே வந்த அம்பாசமுத்திரம், அண்ணாநகரை சேர்ந்த வென்னிமுத்து(20) என்பவர் பேச்சிமுத்து மீது மோதியதில் அவர் கீழே விழுந்துள்ளார். அதற்கு பேச்சிமுத்து, வென்னிமுத்துவிடம் பார்த்து போக வேண்டியது தானே என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வென்னிமுத்து அவரை அவதூறாக பேசி கட்டையால் தாக்கி ரத்தக் காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து பேச்சிமுத்து அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் திருமலைகுமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வென்னிமுத்துவை நேற்று முன்தினம் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

4.7.2025

## திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் ஆனி திருமஞ்சன விழா



திருவண்ணாமலை ஜூலை 4

சிவாலயங்களில் எழுந்தருளிய நடராஜருக்கு மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடைபெறும் ஆருத்ராதரிசனமும், ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று நடைபெறும் திருமஞ்சனமும் மிகவும் சிறப்புக்குரியது. ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று சாயரட்சை பூஜையில் சாமிக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரத்துடன் ஆனி திருமஞ்சனமும் செய்யப்படுகிறது. அவ்வகையில் இந்த ஆண்டு ஆனி திருமஞ்சனம் இன்று நடைபெற்றது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் எழுந்தருளி உள்ள நடராஜருக்கு ஆனி திருமஞ்சன விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதையொட்டி நேற்று இரவு அருணாசலேஸ்வரர் கோவில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் சிவகாமசுந்தரி சமேத நடராஜர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அப்போது சிறப்பு ஆராதனை நடந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வான ஆனி திருமஞ்சனம் இன்று நடைபெற்றது. காலையில் நடராஜருக்கும், சிவகாமசுந்தரி அம்மனுக்கும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டது. இதையடுத்து காலை 10.05 மணி அளவில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு மங்கல வாத்தியங்கள் முழங்க சாமிக்கு மகா தீபாராதனை நடந்தது. பின்னர் நடராஜரும், சிவகாமசுந்தரி அம்மனும் ஆயிரங்கால் மண்டபத்தின் வெளியே எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தனர். இதில் திராளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதையடுத்து பக்தர்கள் மத்தியில் நடனமாடியபடி வந்த நடராஜரும், சிவகாமசுந்தரி அம்மனும் கோவிலின் 5ம் பிரகாரம் வழியாக வந்து திருமஞ்சன கோபுரம் வழியாக புறப்பட்டு மாட வீதியில் உலா வந்தனர். மாட வீதியின் இருபுறமும் பக்தர்கள் திரண்டிருந்து சாமி தரிசனம் செய்தனர்.

## பெஞ்ஜல் புயலால் உருக்குலைந்த மனைகளை அளவீடு செய்யும் பணி தொடக்கம்



விழுப்புரம் ஜூலை 4

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள இருவேல்பட்டு கிராமத்தில் உள்ள மலட்டாறு ஓரமாக நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். கடந்த டிசம்பர் 2ந் தேதி விழுப்புரம் மாவட்டத்தை பெஞ்சல் புயல் தாக்கியதால் சூறாவளி காற்றுடன் இடைவிடாது பெரு மழை பெய்தது. இதனால் மலட்டாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஆற்றின் கரையோரமாக உள்ள இருவேல்பட்டு கிராமத்தில் குடியிருப்புகளுடன் 5 தெருக்களும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இதனால் அந்த பகுதி இருக்கும் இடம் தெரியாமல் மேடு, பள்ளமாக காட்சி அளித்தது. யாருடைய மனை எங்கே இருந்தது என்று தொியாமல் அங்கு வசித்து வந்தமக்கள்பரிதவித்து வந்தனர். தெருக்கள் உருக்குலைந்ததால் ஊருக்குள் வந்து செல்ல முடியாமல் கடும் சிரமம் அடைந்து வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெஞ்ஜல் புயலில் உருக்குலைந்த மனை மற்றும் சாலை, தெருக்களை அளவீடு செய்து சீரமைத்து தரவேண்டும் என அப்பகுதி மக்கள் கோாிக்கை விடுத்து வந்தனர். இதுபற்றிய செய்தி படத்துடன் 'தினத்தந்தி'யில் நேற்று முன்தினம் வெளியானது.

இந்த விவகாரம் விழுப்புரம் மாவட்ட கலெக்டர் ஷேக்அப்துல்ரஹ்மானின் கவனத்துக்கு வந்ததை அடுத்து அவரது உத்தரவின்பேரில்திருவெண்ணெய்நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி மற்றும் அதிகாரிகள் நேற்று இருவேல்பட்டு கிராமத்துக்கு வந்து பெஞ்ஜல் புயலில் உருக்குலைந்த தெருக்களை பார்வையிட்டு 4தெருக்களில்சாலைஅமைக்கநடவடிக்கை எடுப்பதற்கான அறிக்கைகளை மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைத்தனர்.

அதேபோல் திருவெண்ணெய்நல்லூர் தாசில்தார் செந்தில்குமார் தலைமையில் விழுப்புரம் நிலஅளவைத்துறை கோட்ட ஆய்வாளர் சண்முகம், அரசூர் வருவாய் ஆய்வாளர் ரஞ்சனி, கிராம நிர்வாக அலுவலர் கார்த்திகா, நில அளவையர் அன்பரசன், ஜெயசீலன் மற்றும் வருவாய் துறையினர் புயலில் சேதம் அடைந்த ஒவ்வொரு வீட்டு மனைகளையும், 4 தெருகளையும் அளவீடு செய்தனர். இதில் சில இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததை கண்டறிந்த அதிகாரிகள் அதை அகற்றி சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

## களக்காட்டில் வாலிபரின் பைக்கை தீ வைத்து சேதப்படுத்தியவர் கைது

திருநெல்வேலி ஜூலை 4

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு, வடக்கு மீனவன்குளத்தைச் சேர்ந்த சுரேஷ்கோபி (வயது 29) என்பவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த இசக்கிராஜ்(49) என்பவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு முன்விரோதம்இருந்துவந்துள்ளது.தற்போது,சுரேஷ்கோபி சுத்தமல்லியில் வசித்து வரும் நிலையில், நேற்று தனது சொந்த ஊரான வடக்கு மீனவன்குளத்திற்கு பைக்கில் வந்திருந்தார். அதை அறிந்த இசக்கிராஜ், முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு, வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த சுரேஷ்கோபியின் பைக்கை தீயிட்டு எரித்து சேதப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து சுரேஷ்கோபி களக்காடு காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கண்ணன்வழக்குப்பதிவுசெய்துவிசாரணை மேற்கொண்டு இசக்கிராஜை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

## இலங்கைக்கு கடத்தலா? கூடங்குளத்தில் பீடி இலை, சுக்கு பறிமுதல்; 2 பேர் கைது



நெல்லை, ஜூலை 4

நெல்லை கூடங்குளம் கடலோர பகுதியில் கடலில் நின்று கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமானவள்ளம் ஒன்றை போலீசார் சோதனையிட்டனர்.

இதில் 30 கிலோ பீடி இலை பண்டல்கள் மற்றும் 25 கிலோ சுக்கு மூட்டை பறிமுதல் செய்யப்பட்டது. வள்ளத்தில் இருந்த கூத்தங்குழி மற்றும் கன்னியாகுமரியைசேர்ந்தஇருவர்கைதுசெய்யப்பட்டனர். இந்த பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்பட இருந்ததா? என சுங்கத்துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

## நாமக்கல்: பெண் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்தில் உயிரிழப்பு



நாமக்கல் ஜூலை 4

நாமக்கலில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர்காமாட்சி. இவர் இன்று காவல் நிலையத்தில் ஓய்வறைக்கு சென்று ஓய்வு எடுத்துள்ளார்.

ஆனால், ஓய்வறையில் இருந்து அவர் நீண்ட நேரமாக வெளியே வராததால் சந்தேகமடைந்த சக போலீசார் ஓய்வறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளனர்.

அப்போது, சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் காமாட்சி மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். அவரை மீட்ட போலீசார் மருத்துவமனையில் அனுமதித்தனர். காமாட்சியை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர்.

காமாட்சி மாரடைபால் உயிரிழந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்பது குறித்து ராசிபுரம் டிஎஸ்பி விஜயகுமார் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

## இன்றைய ராசி பலன்கள் (4.7.2025)

- மேஷம்: நண்பர்களுடன் சந்தோஷ நேரம். சொத்து விவாதங்களில் எச்சரிக்கை தேவை.
- ரிஷபம்: வெளிநாட்டு வாய்ப்பு, மதிப்பு அதிகரிப்பு காணப்படும்.
- மிதுனம்: நிதி மற்றும் வேலை சார்ந்த சாதகமான நிலை.
- கடகம்: வியாபாரத்தில் வளர்ச்சி. குடும்பத்தில் விவாதங்களை தவிர்க்கவும்.
- சிம்மம்: புதிய வணிக வாய்ப்புகள். குடும்பத்தில் மகிழ்ச்சி.
- கன்னி: உடல்நலப் பிரச்சினைகள், வணிக இழப்புகள். எதிரிகளிடம் கவனம் தேவை.
- துலாம்: மகிழ்ச்சியான நாள். வணிக ஒப்பந்தங்களில் லாபம்.
- விருச்சிகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி. நிலுவையில் உள்ள பணிகள் முடியும்.
- தனுசு: திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.
- மகரம்: பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் வாக்குவாதங்களை தவிர்க்கவும்.
- கும்பம்: தொழிலில் வெற்றி. காதல் உறவில் இனிமை.
- மீனம்: முதலீடுகளைத் தவிர்க்கவும். கலவையான பலன்கள்.



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் மற்றும் தொ.மு.ச.நலச் சங்க மண்டல செயலாளர் ஜீவா.டி. ஜெயக்குமார் ஆசிரியை இந்திராணி ஆகியோர் புதல்வி மோனிகா,M.Sc., B.Ed., PGDB.,சேலம் பாஸ்கரன் கவிதா ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி தாராபுரம் அரிமா அரங்கத்தில் நடந்தது. தமிழக அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் கயல் விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி தி.மு.க. முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். கல்வியாளர் டாக்டர் ஜெய்லானி மணமக்களுக்கு பரிசு வழங்கி வாழ்த்தினார். வரவேற்பு நிகழ்ச்சி யில்ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

## கள்ளக்குறிச்சி: முதிய தம்பதியை மிரட்டி அடித்து 200 சவரன் நகை கொள்ளை

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள கடுவனூரில் முதிய தம்பதியை மிரட்டி அடித்து 200 சவரன் நகை கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடுவனூர் கிராமத்தில் கேசரி வர்மன் என்பவர் வீட்டில் நுழைந்து மர்ம நபர்கள் கைவரிசையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. கேசரி வர்மன் வீட்டில் இல்லாத நிலையில் அவரது தாய் பொன்னம்மாள், தந்தை முனியனை தாக்கி இந்த கொள்ளை சம்பவம் அரங்கேறி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கர ஆயுதங்களுடன் வீட்டிற்குள் புகுந்து முதிய தம்பதியை 2 கொள்ளையர்கள் தாக்கியதாகப் புகார் அளிக்கப்பட்டுள்ளநிலையில், வீட்டில் இருந்த200 சவரன் நகையை கொள்ளையடித்துச் சென்றவர்களை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## படம் வெற்றியடைய காளிகாம்பாள் கோவிலில் சாமி தரிசனம் செய்த 3 பிளச்கே படக்குழுவினர்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களான சித்தார், சரத்குமார் இணைந்து நடித்துள்ள படம் '3 பிளச்கே'.இந்த படத்தை '8 தோட்டாக்கள், குருதி ஆட்டம்' போன்ற படங்களை இயக்கிய ஸ்ரீ கணேஷ் இயக்கி உள்ளார்.

சாந்தி டாக்கீஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் மீதா ரகுநாத், சைத்ரா மற்றும் தேவயானி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். மிடில் கிளாஸ் குடும்பத்தில் இருப்பவர்கள் தங்களுக்கென சொந்தமாக ஒரு 3 பிளச்கே வீடு வாங்க ஆசைப்படும் கதையாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படம் நாளை (4ம் தேதி) திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், '3 பிளச்கே' படம் வெற்றிபெற வேண்டி பாரிமுனையில் உள்ள காளிகாம்பாள் கோவிலில் சரத்குமார், தேவயானி, சித்தார்த் உள்ளிட்ட படக்குழுவினர் சாமி தரிசனம் செய்தனர்.

## 'எல்லா படமும் பான் இந்தியா படம் ஆகாது' நடிகர் நாகார்ஜுனா பேட்டி



சேகர் கம்முலா இயக்கத்தில் நாகார்ஜுனா, தனுஷ் நடிப்பில் கடந்த மாதம் 20ந் தேதி குபேரா படம் வெளியானது. இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படங்களில் இதுவும் ஒன்றாகும். இப்படம் கதை ரீதியாக நல்ல விமர்சனங்களையும், திரைக்கதை ரீதியாக கலவையான விமர்சனங்களையும் பெற்று வருகிறது. இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

குபேரா படம் தெலுங்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. ஆனால் தமிழில் எதிர்பார்த்த அளவில் வெற்றியடைவில்லை. ஆனாலும் இப்படம் ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், நடிகர் நாகார்ஜுனா சமீபத்தில் பேட்டி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில், "கொரோனா காலத்துக்குப் பிறகு, எல்லோரும் மற்ற மொழி திரைப்படங்களைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. ஆனால், அனைத்து திரைப்படங்களும் பான் இந்தியா படமாக ஆகிவிடாது.

ஒரு பான் இந்தியா படத்தை உருவாக்க, அதிக திட்டமிடலும், சக்திவாய்ந்த திரைக்கதையும் தேவை. சில கதைகள் மட்டுமே இந்தியா முழுவதும் வெளியாவதற்குத் தகுதியானது" என்று தெரிவித்துள்ளார்.

## "கொம்புசீவி" படத்தின் மேக்கிங் வீடியோ வெளியீடு



மறைந்த நடிகர் விஜயகாந்த்தின் மகன் சண்முக பாண்டியன் நடிப்பில் சமீபத்தில் 'படை தலைவன்' படம் வெளியானது. இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்தபடத்தின்வெற்றியைதொடர்ந்து, சினிமாவில்நகைச்சுவை திரைப்படம் இயக்குவதில் திறமை மிக்க இயக்குனர் பொன்ராம் இயக்கத்தில் 'கொம்புசீவி' என்ற படத்தில் சண்முக பாண்டியன் நடித்து முடித்துள்ளார். இதில் சரத்குமார், தார்னிகா, காளி வெங்கட் மற்றும் கல்கி ராஜா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பொன்ராம் இயக்கும் இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்து வருகிறார்.

இந்த படம் 1996 ல் உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, வைகை அணை பகுதியில் நடந்த கதைகளை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்தன.

தற்போது படத்திற்கான போஸ்ட் புரொடக்சன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் படத்தின் தயாரிப்பு நிறுவனமானஸ்டார்நிறுவனம் கொம்புசீவி படத்தின் மேக்கிங் வீடியோவை வெளியிட்டுள்ளது. மேலும் படம் விரைவில் வெளியாகும் என்றும் அறிவித்துள்ளது.

## இங்கிலாந்துக்கு எதிராக புதிய சாதனை படைத்த இந்திய கேப்டன் சுப்மன் கில்



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் லீட்சில் நடந்த முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று தொடங்கியது. 'டாஸ்' ஜெயித்த இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் இந்தியாவை பேட் செய்ய அழைத்தார்.

இதையடுத்து யஷஸ்வி ஜெய்ஸ்வாலும், லோகேஷ் ராகுலும் இந்தியாவின் இன்னிங்சை தொடங்கினர். நிதானமாக ஆடிய இந்த ஜோடி 9வது ஓவரில் பிரிந்தது. லோகேஷ் ராகுல் (2 ரன், 26 பந்து), கிறிஸ் வோக்ஸ் வீசிய பந்தை தடுத்து ஆடிய போது அது பேட்டின் உள்பகுதியில் பட்டு ஸ்டம்பையும் பதம் பார்த்தது.

2வது விக்கெட்டுக்கு கருண் நாயர் இறங்கினார். அவரும், ஜெய்ஸ்வாலும் அணியை சரிவில் இருந்து படிப்படியாக மீட்டனர். ஸ்கோர் 95 ஆக உயர்ந்த போது, கருண் நாயர் (31 ரன், 50 பந்து, 5 பவுண்டரி) பிரைடன் கார்ஸ் வீசிய ஷாட்பிட்ச் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து கேப்டன் சுப்மன் கில் வந்தார். மறுமுனையில் சதத்தை நோக்கி முன்னேறிய ஜெய்ஸ்வால் (87 ரன், 107 பந்து, 13 பவுண்டரி) தேவையில்லாமல் வைடாக சென்ற பந்தை அடிக்க முற்பட்டு விக்கெட் கீப்பர் ஜாமி சுமித்திடம் சிக்கினார்.

இதன் பின்னர் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் கால்பதித்தார். கடந்த டெஸ்டில் இரு இன்னிங்சிலும் சதம் அடித்து பிரமாதப்படுத்திய பண்ட் இந்த முறை அதிக நேரம் நிலைக்கவில்லை. அவர் 25 ரன்னில், சுழற்பந்து வீச்சாளர் சோயிப் பஷீர் ஓவரில் பந்தை தூக்கியடித்து கேட்ச் ஆனார். தொடர்ந்து இறங்கிய நிதிஷ்குமார் ரெட்டி (1 ரன்) பந்து வெளியே போவதாக நினைத்து பேட்டை உயர்த்த, போல்டாகி மிரண்டு போனார். இதனால் இந்தியா தடுமாற்றத்திற்குள்ளானது.

இந்த சூழலில் 6வது விக்கெட்டுக்கு சுப்மன் கில்லுடன், ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா கைகோர்த்தார். இருவரும் மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டதுடன் அணியை திடமான நிலைக்கு நகர்த்தினர். அபாரமாக ஆடிய சுப்மன் கில் டெஸ்டில் தனது 7வது சதத்தை நிறைவு செய்தார்.

சுப்மன் கில் சாதனை இங்கிலாந்து தொடரில் இருந்து இந்திய அணியின் டெஸ்ட் கேப்டன்ஷிப்பை ஏற்றுள்ள சுப்மன் முதல் இரு டெஸ்டிலும் சதம் விளாசியுள்ளார். இதன் மூலம் கேப்டனாக முதல் இரு டெஸ்டிலும் சதம் அடித்த 4வது இந்தியர் என்ற சிறப்பை பெற்றார். ஏற்கனவே விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர், விராட் கோலி ஆகிய இந்தியர்கள் இத்தகைய சாதனையை படைத்துள்ளனர்.

இங்கிலாந்து மண்ணில் அடுத்தடுத்து இரு டெஸ்டுகளில் சதம் அடித்த 2வது இந்திய கேப்டன் என்ற பெருமையையும் (முதலில் முகமது அசாருதீன்) கில் பெற்றார்.

ரோகித்சர்மாஓய்வுக்குபிறகு இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக பொறுப்பு ஏற்ற முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலேயே சதம் விளாசி அசத்திய இந்திய கேப்டன் கில்லுக்கு பல்வேறு தரப்பினர் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

SENA (தென்ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா) நாடுகளுடன் இதற்கு முன் விளையாடிய 29 இன்னிங்ஸ்களில் ஒரு சதம் அடிக்காத கில், கேப்டனாக விளையாடிய மூன்றே இன்னிங்ஸ்களில் 2 சதங்களை விளாசி அசத்தி உள்ளார்.

ஆட்ட நேர முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 85 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 310 ரன்கள் சேர்த்துள்ளது. கேப்டன் சுப்மன் கில் 114 ரன்களுடனும் (216 பந்து, 12 பவுண்டரி), ஜடேஜா 41 ரன்களுடனும் (67 பந்து, 5 பவுண்டரி) களத்தில் இருக்கிறார்கள். இங்கிலாந்து தரப்பில் கிறிஸ்வோக்ஸ் 2 விக்கெட்டும், ஸ்டோக்ஸ், பிரைடன் கார்ஸ், பஷீர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர். 2வது நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

## டி.என்.பி.எல். வெளியேற்றுதல் சுற்று: திருச்சியை வீழ்த்தி திண்டுக்கல் அணி வெற்றி

9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. இதில் இன்று வெளியேற்றுதல் சுற்று ஆட்டம் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் டிராகன்ஸ் திருச்சி கிராண்ட் சோழாஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி திருச்சி அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணியில் தொடக்க வீரர்களாக வசீம் அகமது மற்றும் சுரேஷ் குமார் களம் இறங்கினர். இதில் வசீம் அகமது 36 ரன்களும், சுரேஷ் குமார் 23 ரன்களும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர். இதையடுத்து களமிறங்கிய கவுசிக் 9 ரன்களிலும், சஞ்சய் யாதவ் 1 ரன்னிலும், ராஜ்குமார் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து முகிலேஷ் மற்றும் ஜாபர் ஜமால் ஜோடி சேர்ந்தனர். இதில் முகிலேஷ் 12 ரன்களில் அவுட்டானார். இறுதியில் திருச்சி அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ரன்கள் எடுத்தது. திண்டுக்கல் அணி சார்பில் அஸ்வின் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 141 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய அஸ்வின் அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்தார்.அவர்83ரன்கள்எடுத்தநிலையில்ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரர் ஷிவம் சிங் 16 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்த நிலையில் 16.4 ஓவர்களில் திண்டுக்கல் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணி திருச்சி அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. பாபா இந்திரஜித் 27 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.